2022 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 181, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

181—

புதிய சுற்றுலா மையம்

***2227—திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், நாகூரில் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, புதிய சுற்றுலா மையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் முதலில் வணங்குகிறேன்.*

நாகூரில் உள் கட்டமைப்பை மேம்படுத்தி, புதிய சுற்றுலா மையம் அமைக்க அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி உரிய துறையிடமிருந்து கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடு மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரையுடன் பெறப்படுமாயின், சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.*

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகூரைப் பொறுத்த அளவில் உலகப் புகழ்பெற்ற திருத்தலம் இருக்கிறது. அங்கே வரக்கூடிய இலட்சோப இலட்சம் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் இல்லை. கழிப்பறை வசதிகள், குடிநீர் வசதிகள் இல்லை. சாலை வசதிகள்கூட இன்னும் சீராக இல்லை. பேருந்து நிலையம் என்கிற பெயரில் பேருந்து நிறுத்தம்தான் இருக்கிறது. சில்லடி கடற்கரை இருக்கிறது. அங்கே, இலட்சக்கணக்கான மக்கள் கூடுகிறார்கள். ஆனால், அங்கு*

ஒரு முறையான கட்டமைப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே, அதற்கான பணிகளை விரைந்து செய்து, அங்கே வரக்கூடிய மக்களுக்கு அனைத்துக் கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகூரில் கடந்த 2009–2010 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசின் நிதியுதவித் திட்டத்தின்கீழ், மின் கம்ப விளக்குகள், திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், செபஸ்டியர் நகர் அணுகு சாலை வசதிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்களில் அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள், குடிநீர், கழிப்பிட வசதிகள், சாலை வசதிகள், உயர் கம்ப மின் விளக்கு வசதிகள் மற்றும் வடிகால் வசதிகள் போன்றவற்றை உள்ளாட்சி அமைப்புகளின் நிதியுதவியுடன் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் சுற்றுலாத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையையும் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகூர் மட்டுமல்ல; நாகப்பட்டினத்தைப் பொறுத்தளவில் பக்கத்திலேயே வேளாங்கண்ணி தேவாலயம் இருக்கிறது. நாகப்பட்டினத்திலேயே சிக்கல் சிங்காரவேலர் கோயில் இருக்கிறது. இந்த 3 திருத்தலங்களுக்கும் இலட்சக்கணக்கான மக்கள் அடிக்கடி வந்து செல்கிறார்கள். அதற்கேற்றவகையில், நாகப்பட்டினத்தை ஒருங்கிணைந்த சுற்றுலா மையமாக மேம்படுத்த வேண்டும். அது மிக முக்கியம். நகராட்சியிலிருந்து செய்யப்படக்கூடிய பணிகள் ஒவ்வொன்றாக வழக்கமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், சுற்றுலாத் துறை சுற்றுலாவை மேம்படுத்துகின்றவகையில், இதில் கூடுதலாகக்

2022 ஏப்ரல் 26]

கவனம் செலுத்தி இந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அதனால்தான் சுற்றுலா மையம் குறித்த கோரிக்கைகள் இங்கே அடிக்கடி எழுப்பப்படுகின்றன. சுற்றுலா மையம் என்று தனியாக ஒரு concept இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்கிறார்கள். ஆனாலும், இந்தக் கேள்விகள் ஏன் இங்கே அடிக்கடி எழுகின்றனவென்று சொன்னால், இலட்சக்கணக்கான மக்கள் வந்து செல்லக்கூடிய பகுதிகளை மேம்படுத்துவதற்கு சுற்றுலாத் துறையிடம் தனியாக ஒரு திட்டம் வேண்டுமென்பதுதான் காரணம். எனவே, நாகப்பட்டினத்தைப் பொறுத்தளவில், சுற்றுலாத் தலமாக அறிவித்து, அதற்கான பணிகளை மேம்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோன்று, சுற்றுலாத் தலமென்ற அறிவிப்பு எதுவும் அரசாங்கத்திடம் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டில் Tourism Destination Development Scheme சுற்றுலாத் தலம் மேம்படுத்தும் திட்டம் என்ற தனி scheme ஒன்றை ஏற்கெனவே உருவாக்கியுள்ளார். அதில் கடந்த ஆண்டில் சில இடங்களை நாங்கள் தேர்வு செய்திருக்கிறோம். ஒவ்வோர் ஆண்டிலும் 10 இடங்கள் அல்லது 15 இடங்களைத் தேர்வு செய்ய உள்ளோம். கண்டிப்பாக, நாகூரையும் வருங்காலத்தில் நாங்கள் தேர்வுசெய்து ஆவன செய்வோம். 300 சுற்றுலாத் தலங்களைத் தேர்வுசெய்து, Master Plan பெருந்திட்டம் ஒன்றை ஏற்கெனவே அமைத்திருக்கிறோம். அதிலே நாகப்பட்டினத்தில் மட்டும் 8 இடங்களை ஏற்கெனவே தேர்வுசெய்து இருக்கிறோம். அதில் other religious sites என்ற category-யில் 300 சுற்றுலாத் தலங்களில் நாகூர் தர்கா ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. கண்டிப்பாக வருங்காலத்தில் Tourism Destination Development Scheme-ல் தனியாக நிதியொதுக்கி, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை ஒன்றியத்தில் சுற்றுலாத் துறையின் மூலமாக 2006 ஆம் ஆண்டு மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் படகு இல்லம் துவக்கப்பட்டது. அன்றிலிருந்து 2011 ஆம் ஆண்டுவரை சிறப்பாக அங்கு படகு சவாரி இயக்கப்பட்டு வந்தது. கடந்த 10 ஆண்டுக்கால அ.தி.மு.க. ஆட்சியில் படகு சவாரி கிடப்பில் போடப்பட்டது. ஆகவே, அதை சரிசெய்து, மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையை சிறந்த சுற்றுலாத் தலமாக அமைப்பதற்காக ஏற்கெனவே கடந்த ஆண்டில் சுமார் 2 கோடியே 28 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் நிதியொதுக்கப்பட்டு, அதற்கு அரசாணையும் வெளியிடப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற அந்த ஏரியில் தற்போது நீர் இல்லை. அங்கு boathouse அமைப்பதற்காக சுற்றுலாத் துறையின் அதிகாரிகள் அங்கு சென்று பார்வையிட்டார்கள். ஆனால், அங்கு நீர் எதுவும் இல்லாததால் வருங்காலத்தில் சாத்தியக்கூறுகள் இருப்பின் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட ஒகேனக்கல் பிரசித்திபெற்ற சுற்றுலாத் தலம். இந்தச் சுற்றுலாத் தலத்திற்கு பல்லாயிரக்கணக்கானவர்கள் நாள்தோறும் வருகிற நிலையில், இந்த சுற்றுலாத் தலத்தை மேம்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கை வைத்து, இன்று அவர்களின் ஒப்புதலைப்பெற்று, இதை உலகத்தரம் வாய்ந்த சுற்றுலாத் தலமாக உருவாக்கப்படுவதற்கான முயற்சிகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் இந்தச் சுற்றுலாத் தலத்தினுடைய வளர்ச்சிக்கும்,

2022 ஏப்ரல் 26]

மேம்பாட்டிற்கும் காரணம் காவேரியில் இருக்கிற நீர்வீழ்ச்சிதான். ஆகவே, 'நடந்தாய் வாழி காவேரி' என்றும், 'இவ்வான் பொய்ப்பினும் தான் பொய்யா காவேரி' என்றும் போற்றப்படுகிற காவேரியைப் போற்றுகிறவகையில் வருங்காலத் தலைமுறையினர் உணர்ந்துகொள்ளக்கூடிய வகையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அங்கே என்ன வசதி வேண்டுமென்று கேளுங்கள்.*

திரு. ஜி.கே. மணி: *காவேரிக்குப் பெருமை சேர்க்கிற வகையில், அங்கு சுற்றுலாத் தலத்தில் அன்னை காவேரிக்கு சிலை வைப்பது, காவேரி கோட்டம் அல்லது காவேரி அருங்காட்சியகம் உருவாக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–15

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாக அமைகிறது. நான் சொன்ன அந்த 300 சுற்றுலாத் தலங்கள் தொடர்பான* Scheme-*ல், ஒகேனக்கல்லும்* list-*ல் தேர்வு செய்யப்பட்டுள்ளது. கண்டிப்பாக வருங்காலங்களில் நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். எனது தொகுதியில் அமைந்திருக்கக்கூடிய பூண்டி சத்தியமூர்த்தி நீர்த்தேக்கம் கிட்டத்தட்ட 75 ஆண்டுகள் பழமையான நீர்த்தேக்கமாகும். கடந்த ஆண்டு அதற்கு பொன்விழா கொண்டாடப்பட்டது. பெருந்தலைவர் காமராஜரிலிருந்து, நமது முத்தமிழறிஞர் கலைஞர், பேரறிஞர் அண்ணா மற்றும் இன்றைக்கு இருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் வரை அங்கு வந்து தங்கியிருந்த விடுதிகள் எல்லாம்*

இன்றைக்கு பழுதடைந்திருக்கின்றன. அது ஒரு சுற்றுலாத் தலமாக இருந்த இடமாகும். பூண்டி நீர்த்தேக்கம் இன்றைக்கும் சென்னைக்குக் குடிநீர் கொடுக்கக்கூடிய நீர்த்தேக்கமாகும். அதைச் சுற்றியுள்ள இயற்கை சூழலைப் பாதுகாக்க, அதைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல், சுற்றுலாத் தலம் என்று அறிவிக்கப்படுவதில்லை. இருப்பினும், setting up of adventure and eco-camping sites at hill stations, forests, coastal areas and dam sites என்கிற category-ல் ஒரு சில இடங்களை நாங்கள் கடந்த ஆண்டுகளில் தேர்வு செய்து, அதற்காக Tourism Destination Development Scheme-ல் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் நீலகிரியில் இருக்கிற ஊட்டி Boat House, செங்கல்பட்டில் இருக்கிற முதலியார்குப்பம் Island, அதுமட்டுமல்லாமல் dam-ஐப் பொறுத்தவரைக்கும், தென்காசி மாவட்டத்தில் இருக்கிற குண்டாறு dam மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற சிற்றாறு dam போன்றவை தேர்வு செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர், இதுபோன்று ஆங்காங்கே இருக்கிற சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்கு கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு வருடமும் ஒரு சில இடங்களை மட்டும்தான் தேர்வு செய்யமுடியும். கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது நான் நீண்ட காலமாகக் கேட்டிருந்த கோரிக்கை. என்னுடைய தொகுதிக்குட்பட்ட முட்டம் கடற்கரை இயற்கையாகவே மிக

2022 ஏப்ரல் 26]

அழகான சுற்றுலாத் தலமாக இருக்கிறது; சுற்றுலாத் தலமாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், developments *இல்லை. அங்கே அடிப்படை வசதிகள் சரியாக இருக்கின்ற வகையில் செய்தால், நிச்சயமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் மிக முக்கியமான சுற்றுலாத் தலமாக அது அமையும். இன்றைக்கு பல மாவட்டங்களிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் மக்கள் வந்து கொண்டிருக்கின்றனர். அதற்கு அடிப்படை வசதிகளை செய்துகொடுத்து, வெகு விரைவில், அதை* development *செய்வதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் முதன்முதலாக கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சென்றுதான் ஆய்வு செய்தேன். திருவள்ளுவர் சிலை முதற்கொண்டு, அங்கே இருக்கின்ற முட்டம்* Beach*-ஐ நாங்கள் பார்வையிட்டோம். ஏற்கெனவே கன்னியாகுமரி மாவட்டத்தில், திருவள்ளுவர் சிலை மற்றும் சிற்றாறு* dam *ஆகிய இரண்டு இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. முட்டமும் அந்த* list*-ல் இருக்கிறது. கண்டிப்பாக, அங்கே சென்று ஆய்வு செய்து, நிதிநிலைமைக்கேற்ப அந்த இடத்தை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதும் குறைவான அளவில் கோரிக்கையை எழுப்புகிற நான், இப்போது சற்று நீண்ட கோரிக்கையினைக் கேட்க விழைகிறேன். ஏனென்றால் தங்கள் வயதில் இருக்கின்ற எல்லோரும் பார்த்த சாத்தனூர் அணை, பழைய முதலமைச்சர்கள், சிவாஜி கணேசன் அவர்கள், ஜெமினி கணேசன் அவர்கள் உள்ளிட்ட நடிகர்கள் எல்லாம் திரைப்படங்களில் நடித்த அந்த சாத்தனூர் அணை சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால்,*

கடந்த காலங்களில் அதற்கான தேவைகள் எதுவும் பூர்த்தி அடையாததால், இப்போது அது சுற்றுலாத் தலமாக இருந்தாலும், அங்கே சுற்றுலாப் பயணிகளே வராத நிலை இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிப்பட்ட கவனத்திற்கு எடுத்துச் சென்று, சிறப்பு அடிப்படையில் சாத்தனூர் அணை கடந்த காலங்களில் எப்படி இருந்ததோ, அப்படி சிறந்த சுற்றுலாத் தலமாக அமைத்துத் தருவதோடு, செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, ஜவ்வாது மலையிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் படகு சவாரி வசதிகள் எல்லாம் செய்யப்பட்டிருந்தன. அவற்றையும் புதுப்பித்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலைக்கு சுற்றுலாத் தலம் சார்ந்த வசதிகளை மேம்படுத்துவதற்கு ஏற்கெனவே அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற சாத்தனூர் அணையை* adventure and eco-camping sites category*-ல் நாங்கள் ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, வரும் ஆண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஆ) குறுகிய கால வினா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குறுகிய கால வினா எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

1—

கலைக் கல்லூரி

55734—திரு. பால் மனோஜ் பாண்டியன்:

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—